# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

**********

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032**

**முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),**

**********

**முறையீட்டு மனு எண்.94/2019/பே.1**

**ஆணை நாள்: 30-08-2019.**

**திரு.M. மெய்தீன் அப்துல் காதர்,**
**168/B.5 சிவன் கோயில் தெரு,**
**காயல் பட்டினம்,**
**தூத்துக்குடி மாவட்டம்–628204.** — **முறையீட்டு மனுதாரர்.**

செயல்அலுவலர்,
ஆறுமுகநேரி பேரூராட்சி,
தூத்துக்குடி மாவட்டம். — **எதிர் மனுதாரர்**

## ஆணை

தூத்துக்குடி மாவட்டம், காயல்பட்டினம், சிவன்கோவில் தெரு, எண். 168/B-5 என்ற முகவரியில் வசிக்கும் திரு M. மெய்தீன் அப்துல் காதர் என்பவரது 10.06.2019 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, முறையீட்டு மனு எண். 94/2019 என எண்ணிடப்பட்டது. முறையீட்டு மனு மீதான அறிக்கைகள் பெறப்பட்டு, விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு உரிய பரிசீலனைக்குப்பின் கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

முறையீட்டு மனுதாரர் தனது முறையீட்டு மனுவில், தூத்துக்குடி மாவட்டம், ஆறுமுகநேரி பேரூராட்சிப் பகுதிகளில் சேகரிக்கப்படும் குப்பைகளை, பேரூராட்சி நிர்வாகம் தொடர்ந்து சரியான முறையில் கையாளாமல் இருப்பதாலும், திடக்கழிவு மேலாண்மை திட்ட விதிமுறைகளின்படி குப்பை கொட்டும் இடத்தினை அமைக்காமல் உள்ளதாலும், சேகரிக்கப்படும் குப்பைகளை பேரூராட்சி அலுவலகம் எதிரே கொட்டப்பட்டு அவ்விடத்தில் தினமும் தீ மூட்டி எரிப்பதால் காற்று மாசுபாடு ஏற்பட்டு சுகாதார கேடு ஏற்படுவதாக தெரிவித்து, மேற்படி குப்பை கொட்டுவதற்கு திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தினை முறையாக செயல்படுத்தி சட்டத்திற்கு புறம்பாக தீ வைக்கப்படுவதை தடுக்க நடவடிக்கை எடுக்கக் கோரி தனது மனுவினை சமர்ப்பித்துள்ளார்.

09.08.2019 நாளிட்ட தூத்துக்குடி மாவட்டம், ஆறுமுகநேரி பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கையில், ஆறுமுகநேரி பேரூராட்சி பகுதியில் சேகரிக்கப்படும் குப்பை மற்றும் கழிவுகளை கொட்டுவதற்கு மாற்று இடம் ஏதும் பேரூராட்சிப் பகுதிக்குள் இல்லை எனவும், சேகரிக்கப்படும் குப்பைகளை பேரூராட்சி எதிரேயும், வளமீட்பு பூங்காவிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள 50 சென்ட் இடத்திலும் கொட்டப்பட்டு வருவதாகவும், வளமீட்பு பூங்காவினை அபிவிருத்தி செய்யும் பொருட்டு திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின் கீழ் 2018–19ம் ஆண்டில் ரூ.41.00 லட்சம் மதிப்பீட்டில் உரம் தயாரிப்புக் கூடம் உள்ளிட்ட திடக்கழிவு மேலாண்மை திட்டப் பணிகள் நடைபெற்று வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், தற்போதைய நிலையில் மாற்று இடம் ஏதும் கிட்டாததால் பேரூராட்சிக்கு அருகில் உள்ள சிற்றூராட்சிப் பகுதியில் காலி நிலம் கையகப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், அரசு மூலம் மாற்று இடம் கிடைத்தவுடன் குப்பைகள் அகற்றப்பட்டு மேற்படி இடத்தில் சேகரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளதுடன், சேகரிக்கப்பட்ட குப்பைகள் மீது சமூக விரோதிகளால் தீயிடப்படுவதை தவிர்க்கும் விதமாக தீவிரமாக கண்காணிக்க இரண்டு பணியாளர்கள் பேரூராட்சி மூலம் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

18.07.2019 நாளிட்ட அழைப்பாணையின்படி, 28.08.2019 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜரான முறையீட்டு மனுதாரர் தனது வாக்குமூலத்தில் ஆறுமுகநேரி பேரூராட்சி நிர்வாக திடக்கழிவு மேலாண்மை திட்டத்தினை விதிகளின்படி கையாளாமல் உள்ளதாலும், குப்பை கொட்டும் இடத்தினை முறைப்படி அமைக்காததாலும், குப்பைகளை தீ வைத்து எரிப்பதாலும் சுகாதார சீர்கேடு ஏற்பட்டு காற்று மாசுபாடு ஏற்பட்டுள்ளதாகவும், சம்பந்தப்பட்ட இடம் திருச்செந்தூர்–தூத்துக்குடி மெயின் ரோட்டில் பேரூராட்சி அலுவலகம் மற்றும் வணிக வளாகங்கள் அமைந்த முக்கியமான பகுதி எனவும், தினமும் ஏற்படும் புகை மூட்டத்தால் பொதுமக்கள் பாதிப்புக்கு உள்ளாவதால் சட்டத்திற்கு புறம்பாக தீ வைக்கப்படுவதை தடுத்து, திட்டக்கழிவு மேலாண்மைத் திட்டத்தினை விதி முறைகளின்படி செயல்படுத்திட உரிய ஆணை வழங்குமாறு தெரிவித்துள்ளார்.

18.07.2019 நாளிட்ட அழைப்பாணையின்படி, 28.08.2019 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜரான ஆறுமுகநேரி பேரூராட்சி செயல் அலுவலர் தனது வாக்குமூலத்தில், முறையீட்டு மனுவில் குறிப்பிட்டுள்ள பொருள் குறித்து திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தில் சுமார் ரூ.41.00 லட்சம் மதிப்பீட்டில் விதிமுறைகளின்படி கழிவுகளை அப்புறப்படுத்துவதற்கான பணிகள் நடைபெற்று வருவதாகவும், இப்பணி சுமார் 3 மாத காலத்தில் முடிக்கப்பட்டுவிடும் எனவும், மேற்படி பணிகள் முடிக்கப்பட்டவுடன் மேற்படி குப்பைகள் முழுவதும் அகற்றப்பட்டு விடும் எனவும், கடந்த இரண்டு மாதங்களாக முறையீட்டு மனுவில் குறிப்பிட்டுள்ள சுற்றுச்சூழல் பிரச்சினை ஏதும் ஏற்படாதவாறு உரிய நடவடிக்கைகள் பேரூராட்சியால் எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

இந்நேர்வில் முறையீட்டு மனுதாரரின் முறையீட்டு மனு, முறையீட்டு மனு மீதான தூத்துக்குடி மாவட்டம், ஆறுமுகநேரி பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கை, முறையீட்டு மனுதாரர் மற்றும் ஆறுமுகநேரி பேரூராட்சி செயல் அலுவலர் ஆகியோர்களின் வாக்குமூலங்கள் பரிசீலிக்கப்பட்டன. முறையீட்டு மனுதாரரின் புகார் தொடர்பாக ரூ.41.00 லட்சம் மதிப்பீட்டில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் கழிவுகளை அப்புறப்படுத்துவதற்கான பணிகள் நடைபெற்று வருவதாகவும், இப்பணி சுமார் மூன்று மாத காலத்திற்குள் முடிக்கப்பட்டு குப்பைகள் அகற்றப்பட்டுவிடும் எனவும், தற்போது சுற்றுச்சூழல் மாசு ஏற்படாதவாறு பேரூராட்சி மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது எனக் குறிப்பிட்டுள்ள ஆறுமுகநேரி பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்கத்தை ஏற்று இப்பொருள் தொடர்பான தொடர் நடவடிக்கையை கைவிடலாம் என முடிவு செய்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது. இருப்பினும் மேற்படி பணியினை குறிப்பிட்ட காலத்திற்குள் முடிக்கவும், பொதுமக்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாவண்ணம் முறையே கண்காணித்திடவும் வலியுறுத்தி ஆணையிடப்படுகிறது.

2019–ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 30–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

–//ஒப்பம்//–

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

–//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//–

4/9/2019

செயலாளர்.

4/9/19

பெறுநர்
1.திரு .M. மெய்தீன் அப்துல் காதர்.
168/B-5 சிவன் கோவில் தெரு,
காயல்பட்டினம்,
தூத்துக்குடி மாவட்டம்–628204.
2.செயல் அலுவலர்,
ஆறுமுகநேரி பேரூராட்சி,
133–A, I.F. Road,
ஆறுமுகநேரி–628202.
3.பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்,
திருநெல்வேலி மண்டலம்,
என்.ஜி.ஓ.காலனி, ஜவஹர் நகர்,
பெருமாள்புரம் அஞ்சல்,
திருநெல்வேலி–627007.
நகல்
மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனி எழுத்தர்.
முறைமன்ற நடுவ செயலரின் தனி எழுத்தர்.
உதவிப் பிரிவு அலுவலர் (ஊராட்சிகள்) தகவலுக்காக
உதிரி–2.